DEPOSITION OF WITNESS

(Chapter XXIII code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE ADDITIONAL MAHILA COURT, COIMBATORE.

| | |
|---|---|
| Calendar | }CC 27/18 |
| Preliminary Register | } |
| | } Prosecution அ.சா. 6 |
| Deposition of Witness for | } Defence |
| | } Court |
| Name | } கோ. பிரியமாலினி காவல் ஆய்வாளர் |
| Taluk | } |
| Village | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the day or

Date: 02.04.2019 முதல் விசாரணை

நான் தற்போது சென்னை மாநகரில் சென்னை பாதுகாப்பு பிரிவில் (SCP) காவல் ஆய்வாளராக பணிபுாந்து வருகிறனே் . கடந்த 13.07.2014 தேதி 19 மணிக்கு போத்தனூர் காவல் நிலைய கு, எண். 179/2016 ச.பி. 498 ஏ, 506(1) இதச பிரிவில் ஜித்திகா என்பவர் போத்தனூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் கீழ் மேற்கண்ட வழக்கினை தலைமை காவல் 2467 மாரியப்பன் எதிரிகள் ஜித்திக்காவின் கணவர் பிரவீன், மாமனார் பிரேம் தாஸ், மாமியார் புஸ்ப லதா, பிரவீனின் சித்தப்பா ரவி ஆகியோர்களின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருக்கிறார். முதல் தகவல் அறிக்கை அதசஆ. 6. வழக்கின் கோப்புகளை புலன் விசாரணைக்காக அனைத்து மகளிர் காவல் நிலைய கிழக்கு உதவி ஆய்வாளர் திருமதி. பிரேமா அவர்களின் பார்க்கு வைத்ததை, மேற்படி உதவி ஆய்வளர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 18.03.2016 ம் தேதி சாட்சிகள் ஜித்திக்கா, கே.வி. நாரயணன், சித்ரகலா, கோபால கிருஷ்ணன், மாணிக்கம் ஆகியோர்களை விசாரித்து வாக்கு மூலங்களை பதிவு செய்துள்ளார். 25.03.2016 ம் தேதி ஸ்ரீகுமார் சாட்சியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 10.04.2016 ம் தேதி சாட்சிகள் உதய குமார், ரங்கப்பன் வாக்கு மூலம் பதிவு செய்தும் 25.04.2016 ம் இவ்வழக்கின் புகார்தாரருக்கு சிகிச்சை அளித்த டாக்டர். பிரபா அவர்களை விசாரித்து சிகிச்கை அளித்திற்கான மருத்துவ சான்றிதழ் வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறார். காயச்சான்றிதழ் அதசாஆ.7 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த த. கா. 2467 மாரியப்பன் விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி புகார்தாருக்கும் அவரது கணவருக்கும் இடையே குடும்ப பிரச்சனை குறித்து சாய்பாபா

காலணி காவல் நிலையத்தில் வாதி ஜித்திகா புகார் மனு கொடுத்து சாய்பாபா காலணி மனு ரசீது எண். 119/2015 திருமதி. வாசுகி உதவி ஆய்வாளரால் கொடுக்கப்பட்ட மனு ரசீது அதசாஆ 8. மற்றும் 21.12.2015 ம் தேதி மேற்படி வாதி ஜித்திக்கா மற்றும் குடும்ப பிரச்சனை குறித்து போத்தனூர் காவல் நிலையத்தில் வாதி ஜித்திகா புகார் மனு கொடுத்து போத்தனூர் மனு ரசீது எண். 672/2015 திரு. காசிப்பாண்டியன் உதவி ஆய்வாளரால் கொடுக்கப்பட்ட மனு ரசீது அதசாஆ .9 மற்றும் 27.10.2014 ம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாகியான உதவி ஆய்வாளர் திருமதி. பிரேமா அவர்களால் இவ்வழக்கின் வாதி ஜித்திகா மற்றும் குடும்ப பிரச்சனை குறித்து கொடுத்த புகார் மனுவின் கீழ் அனைத்து மகளிர் காவல் நிலைய கிழக்கு ரசீது எண். 513/2015 மனு ரசீது அதசாஆ.10 ஆகியவற்றை உதவி ஆய்வளார் பிரேமா நீதிமன்றத்தில் சமர்பித்துள்ளார். மற்றும் திருமதி. பிரேமா உதவி ஆய்வாளர் இவ்வழக்கின் வாதி ஜித்திகாவிற்கும் வழக்கின் எதிரி பிரவீனுக்கும் நடந்த திருமணம் குறித்த திருமண பத்திரிக்கையும் ஆவணமாக இந்நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.. மேற்ப திருமண பத்திரிக்கை அதசாஆ. 11. உதவி ஆய்வாளர் திருமதி. பிரேமா விசாரனை முடித்து மேல் விசாரணைக்கு வைத்ததை நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு உதவி ஆய்வாளர் விசாரித்த மேற்படி சாட்சிகளை விசாரித்த போது மேற்படி அதே சங்கதிகளை கூறியதால் நான் தனியாக வாக்கு மூலம் பதிவு செய்யப்படவில்லை. என் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது 31.05.2016 ம் தேதி மேற்படி ச.பி. ன் கீழ் குற்றஅறிக்கை தாக்கல் செய்தேன் தலைமை காவலர் மாரியப்பன் மற்றும் உதவி ஆய்வாளர் திருமதி. பிரேமா ஆகியோரின் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சையம். அவர்கள் தயாரித்த கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

குறுக்கு விசாரணை.

நீங்கள் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும் புலன் விசாரணை அதிகாரி சரியாக விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல.